மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, தனுஷ்கோடி பகுதியைப் பற்றி நான் ஏற்கெனவே தெரிவித்தேன். கடல் போக்கு வரத்திற்கு இலங்கை போன்ற இடங்களிலிருந்து வரும் அகதிகள் இறங்கு வதற்காக ஒரு "பியர்" கட்டப்பட்டு இருக்கிறது. அதாவது ஒரு சிறிய துறைமுகம் கட்டப்பட்டு இருக்கிறது. அதைத் தவிர அங்கத்தினர் குறிப் பிட்டதுபோல் பக்தர்கள் போவதற்கும் இருக்கிறது. இப்போது யாரும் அங்கே போவதில்லை. போவதற்கு பயப்படுகிறார்கள்.

திரு. எம். பெரியசாமி : தலைவரவர்களே, ஹாலந்து நாட்டிற்கு அமைச்சர் போகவில்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை இங்கே நிறைவேற்றுவதற்காக உலக நாடுகளுக்கு அவர்கள் சுற்றுப் பயணம் செய்து, அந்தத் திட்டங்களைக் கண்டறிந்து இங்கே நிறைவேற்ற வழிவகை செய்ய இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் சிபார்சு செய்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*192 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that sea erosion near Thangapattinam in Kanyakumari district around the month of June 1973 caused damages to dwelling houses; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 1973 ஜூன் மாதம் 18, 19 தேதிகளில் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டிணம் கிராமத்தில் ஏற்பட்ட கடலரிப்பால் இரண்டு குடிசைகள் சேதமுற்றன. மற்றும் 50 தென்னை மரங்களும் சாய்ந்துவிட்டன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத் தில் ஆண்டுதோறும் பல கிராமங்களின் பெரும் பகுதி கடல் அரிப்புக் குள்ளாகி 7 மீனவப் பெண்கள் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகியிருக்கிறார்கள். நிரந்தரமாக கடல் அரிப்பைத் தடுப்பதற்காக கேரளத்தில் கடலோரப் பகுதியில் கடலின்உள் கல்லை அடுக்கி தடுத்து இருக்கிறார்கள். அந்த முறையில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, கேரளத்தில் போடப்பட்டிருக்கும் தடுப்புச் சுவர் போன்ற ஒரு ஏற்பாட்டைச் செய்வதற் காகத்தான் கன்னியாகுமரி பகுதியில் ஏறத்தாழ $14\frac{1}{2}$ கிலோ மீட்டர் நீளத்திற்கு கல் போடுவது என்று திட்டமிடப்பட்டு மொத்த செலவு ரூ. 3·51 கோடியாகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. அதை முழுவதும் இந்திய அரசாங்கம் மானியமாக வழங்கவேண்டுமென்று நாம் தெரிவித்தோம். ஆனால் அவர்கள் மானியமாகக் கொடுக்க முடியாது,

கடனுகத்தான் கொடுக்கமுடியும் என்று தெரிவித்து இருக்கிறுர்கள். இன்னும் அவர்கள் "டெக்னிகல் கிளியரென்ஸ்" கொடுக்கவில்லை. அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கடல் அரிப்பு ஜூன், ஜூலை மாதங்களில் வருஷந்தோறும் ஏற்பட்டுக்கொண்டிருககிறது. மிடாலம் என்ற கிராமத்தில் ரூ. 85,000 செலவழித்து தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. ஆனுல் அந்தத் தடுப்புச் சுவர் கட்டிய ஒரு மாதத்திற்குள் அடித்துச் செல்லப்பட்டது. ஆகவே, இம்மாதிரி பணத்தை அரசு செலவு செய்கிறபோது சரியான முறையில் நிரந்தரமாக பரிகாரம் காணும் முறையில் திட்டங்களை வகுப்பார்களா என்று அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, அது போன்ற ஒரு திட்டத்தைத்தான் நான் தெரிவித்தேன். ஏறக்குறைய ரூ. 3·51 கோடி அளவில் செலவு செய்து நிரந்தரமான தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்றுதான் திட்டமிட்டு இருக்கிறேம். மத்திய அரசாங்கம் இன்னும் அதற்கு "டெக்னிகல் கிளியரன்ஸ்" தரவில்லை. சில தகவல்கள் கேட்டு இருக்கிறுர்கள். அந்தத் தகவல்கள் கொடுத்து, அவர்கள் அனுமதி கிடைத்த பிறகு வேலை தொடங்கப்படலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் கடல் அரிப்பு எந்தெந்தப் பகுதிகளில் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து அறிக்கை தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது என்று கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் விரிவாக அளிப்பதாகக் கூறினுர்கள். அதைப்பற்றி தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இராமேஸ்வரம், கன்னியாகுமரி பகுதிகளில்தான் கடல் அரிப்பு ஏற்பட்டு வருகிறது.

முற்பகல் [9.30]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கடலரிப்பினுல் இரண்டு குடிசைகள் நாசமானதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்பட்டதா? தென்னை மரங்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்கு நஷ்ட ஈடுதரப்பட்டதாக தகவல் இருக்கிறது. எவ்வளவு ரூபாய் என்ற தகவல் இப்பொழுது இல்லை.

காவிரி ஆற்றில் குறுக்கே புதிய பொறிமதகு

*193—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காவிரியில் குறுக்கே புதிய ரெகுலேட்டர் ஒன்று அமைத்து பழங்காவிரி மூலம் அதன் கடைமடைப் பகுதிகளுக்கு பாசன வசதியினை சீராக்கி அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?